**COS No.92/2023**

**DW–1 –முத்து குமார்**

**த/பெ.சீத்தாராமன்**

**நாள். 22.01.2026**

**<u>பிரதிவாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

1.வழக்கு சொத்து வாதி யசோதா மீனாட்சிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று சொன்னால் சரிதான். எனக்கு வாடகை ஒப்பந்த பத்திரம் போடுவதற்கு முன்பே வாதி எனக்கு இமெயில் ரப் டிராப்ட் அனுப்பி வைத்திருந்தார் என்று சொன்னால் ஆமாம். அதனை சரிபார்த்துவிட்டு 14.07.2021 ஆம் தேதி அன்று வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல 02.08.2021 ஆம் தேதிக்கு தான் வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்தினோம். **வா.சா.ஆ–2** ஆவணத்தில் 14.07.2021 என்று தான் காணப்படுகிறது என்று சொன்னால் ஆவணத்தில் அப்படித்தான் இருக்கிறது ஆனால் அந்த தேதியில் நான் எந்த அட்வான்ஸும் கொடுக்கவில்லை.

2.இந்த விவரத்தை குறிப்பிட்டு என்னுடைய எதிர்வழக்குறையிலும் அல்லது என்னுடைய சாட்சியத்திலும் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. வழக்கு சொத்தில் இருந்து என்னை காலி செய்ய சொன்ன போது தான் நான் வாதிக்கு வாடகை பாக்கி தொடர்பாக கேட்டு வாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்று சொன்னால் சரிதான் நான் அனுப்பிய அறிவிப்புதான் **வா.சா.ஆ–4** என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் நான் அடிப்படை வசதிகளை செய்து கொள்வதற்காக 5 லட்சம் ரூபாய் செலவு செய்ததாக சொல்லி இருக்கிறேன் என்றால் சரிதான்.

3. நானும் வாதியும் வாடகை பாக்கி சம்பந்தபட்டு பல ஈமெயில்களை பரிமாற்றம் செய்து இருக்கிறோம் என்று சொன்னால் ஆமாம். ஆனால் எந்த ஈமெயிலும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் ஆமாம். எந்த இமெயிலிலும் நான் ரூபாய் 5 லட்சம் செலவு செய்ததை குறிப்பிட்டு

சொல்லவில்லை என்பதால் தான் அந்த ஈமெயில்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரி அல்ல இமெயிலில் குறிப்பிட்டு சொல்லி இருக்கிறேன்.

4.கட்டடத்தை பார்த்து விட்டு தான் வாடகை ஒப்பந்தம் போட்டுக் கொண்டோம் என்று சொன்னால் நான் அட்வான்ஸ் கொடுத்த பின்பு வாடகை ஒப்பந்தம் போட்டுக் கொண்டோம் அதன் பின்பு வேலை செய்து கொடுப்பதாக சொன்னார்கள். நான் சொல்வது போல் எந்த வாசகமும் வாடகை ஒப்பந்தத்தில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நான் வாடகைக்கு வந்த பின்பு கட்டிடம் எனக்கு ஏற்றவாறு இல்லை என்றிருந்தால் நான் உடனே சட்ட அறிவிப்பு அனுப்பியிருக்க முடியும் என்று சொன்னால் சரிதான். இந்த ரூபாய் 5 லட்சம் செலவானது நான் வாதியின் கட்டிடத்தில் என் வசதிக்கு ஏற்ப என் தொழிலின் வசதிக்காக நான் ஏற்படுத்திக் கொண்ட செலவு என்று சொன்னால் சரியல்ல அதில் ஃப்ளோரிங் செய்திருக்கிறேன்.

5.ஃப்ளோரிங் சரியாக இருக்கவில்லை என்றால் நான் அந்த கட்டிடத்திற்கு வாடகைக்கே சென்றிருக்க மாட்டேன் என்றும் சொன்னாள் சரியல்ல. என்னுடைய வாடகை ஒப்பந்தத்தை நாங்கள் சட்டப்படி பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். டி.என்.ஆர்.ஆர் போர்ட்டலில் நாங்கள் வாடகை ஒப்பந்தத்தை பதிவு செய்யாததால் தான் வாடகை நிலுவை மற்றும் காலி செய்வதற்காக போடப்பட்ட வழக்கு உரிய நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்று விருப்பப்பட்டது. தற்போது நாங்கள் அந்த கட்டிடத்தை காலி செய்தும் கொடுத்து விட்டோம் அது 01.11.2022 தேதி ஆனது

6.என்னுடைய வழக்குரையில் மேற்சொன்ன 01.11.2022 தேதியை குறிப்பிட்ட அன்றைய தேதியில் காலி செய்து விட்டேன் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. ஆனால் இன்னொரு நாளில் அதாவது 17.11.2023 முதல் 17.01.2025 வரை காண மின் கட்டணத்தை செலுத்தி இருக்கிறேன் என்று சொன்னால்

அப்போது மின் உபயோகமே இல்லை. நான் சும்மா கட்டிடத்தை பூட்டி வைத்திருந்தாலும் மின்சாரம் உபயோகமாகாது என்று சொன்னால் சரிதான்.

7.இந்த வழக்கை பொருத்து பாதிக்கு 31.05.2023 தேதி வரையில் வாடகை பாக்கியாக 4,64,000 ரூபாய் தரவேண்டிய பாக்கியிருக்கிறது என்றும் என்னுடைய அட்வான்ஸ் தொகையை கழித்தால் அது போக 3 லட்சத்து 39 ஆயிரம் ரூபாய் நான் பாக்கி கொடுக்க வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு சம்பந்தப்பட்ட அனைத்து தொகைகளும் ரொக்கமாக கைமாற்றம் செய்யப்படவில்லை அனைத்தும் வங்கி கணக்கு பரிவர்த்தனைகளாகவே இருந்தது.

8.நான் கட்டடத்தை பூட்டி வைத்துவிட்டு சென்று விட்டதால் வாதி 9,653/– ரூபாய் மின்சார கட்டணம் செலுத்தியிருக்கிறார் என்றும் மேலும் மின் துண்டிப்பு செய்யப்பட்டதால் அதனை உயிர்பிப்பை செய்ய 354 ரூபாய் கட்டியிருக்கிறார் என்று சொன்னால் எனக்கு தெரியாது. இன்று வரை நான் பூட்டி வைத்திருக்கும் கட்டடத்திற்கு வாதி தான் மின்சார கட்டணம் செலுத்தி வருகிறார் என்று சொன்னால் எனக்கு தெரியாது. வாதி ஏற்கனவே கட்டிடத்தை சுவாதீனம் எடுத்து பூட்டு போட்டு இருந்த நிலையில் அதற்கு மேல் . நானும் ஒரு பூட்டு போட்டு இருந்தேன் என்று சொன்னால் ஆமாம் என்னுடைய சுவாதீனத்தில் இருந்த போது நான் பூட்டு போட்டு தான் வைத்திருந்தேன்.

9. என்னுடைய வழக்குரையில் வாதி தான் பாக்கி எனக்கு தர வேண்டி இருப்பதாக சொல்லி இருந்த சூழலில் இன்று வரை வாதியிடம் பாக்கி தர வேண்டி கேட்டு எந்த சட்ட அறிவைப்பும் நான் அனுப்பவில்லை என்று சொன்னால் ஆமாம். ரூபாய் 4,18,000 நான் செலவு செய்ததாக சொல்லி இருந்த போதிலும் நான் வாடகைக்கு குடியிருந்தா வாதியின் கட்டடத்தின் முகவரிகள் தான் அந்த 4,15 ஆயிரம் ரூபாய்க்கான சரக்குகளை வாங்கி இருக்கிறேன் என்று சொன்னால் ஆமாம். வாதியின் கட்டடத்திற்கு தான் செலவு செய்தேன் என்பதை நிரூபிக்க வேறு சாட்சிகளையும் நான் முன்னிறுத்தவில்லை என்று சொன்னால்

சரிதான் ஆனால் சாட்சிகள் இருக்கிறது. நான் ஜிஎஸ்டி க்ளைம் அந்த பில்டிங் செலவு செய்த வகையில் பில்லில் குறிப்பிட்டிருந்தபோதிலும் அதனை க்ளைம் செய்து எடுத்துக் கொள்ளவில்லை என்றால் ஆமாம்

10.ஆனால் குறிப்பிட்ட நிறுவனத்திற்கு அந்த தேதியில் 4 லட்சத்து 18 ஆயிரம் அனுப்பாமல் இரண்டு லட்சம் ரூபாய் தான் அனுப்பியதாக என்னுடைய வங்கி கணக்கில் காட்டப்பட்டிருக்கிறது என்று சொன்னால் ஆமாம், இரண்டு லட்சம் ரூபாய் ரொக்கமாக கொடுத்தேன். ஆனால் இந்த விவரத்தை முதன் முதலில் இன்று தான் சொல்கிறேன் என்று சொன்னால் சரிதான். நான் 4 லட்சத்து 18 ஆயிரம் ரூபாய் செலவு செய்ததாக போலியாக ஒரு பில் நிறுவனம் கொடுத்து இருக்கிறது என்றும் அதனை வைத்து தான் நான் பொய் வழக்கு அடைகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. இன்று வரை வழக்கு சொத்து என்னுடைய சுவாதீனத்தில் தான் இருக்கிறது என்றும் அதனை காலி செய்து வாதி வாசம் ஒப்படைக்கும் வரைவாதி கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

Dr.V.Sree Vidya.
Digitally signed by Dr.V.Sree Vidya.
DN: cn=Dr.V.Sree Vidya., ou=Judicial Department, o=Judicial Officer, l=Tiruppur, st=Tamil Nadu, c=+91

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.